

திருவண்ணாமலையில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, அவரது சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாலை அணிவித்து வணங்கினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், குட்டி புகழேந்தி, ஏ.ஏ.ஆறுமுகம். க.பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் – அய்யன்

# திருவள்ளுவர் சிலைக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார்!

### கழக முன்னோடிகள், பொதுமக்கள் பங்கேற்பு!

திருவளளுவர்,ஜன.17-

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார். கழக முன்னோடிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

15.01.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, வேட்டவலம் சாலை சந்திப்பில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

விழாவில் போற்றுவோம், போற்றுவோம், வள்ளுவரை போற்றுவோம்!

நடப்போம், நடப்போம் குறள் வழி நடப்போம் என உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விழாவில் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ. ஆறுமுகம், கு.கணேஷ், கற்பகம்சரவணன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், துரை.வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.சமயராஜ், ராயல் தியாகு, ஆ.தே.முருகையன், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, அத்தியந்தல் ராமகிருஷ்ணன், தொ.மு.ச., பரசுராமன், வட்ட செயலாளர்கள் பி.ஆர்.நாகராஜ், க.பிரகாஷ், சி.கே.சசிகுமார், மு.ஆனந்தன், கே.வெங்கட், குணாளன், ரகுபதி, அ.சபரி, ஆர்.சாதிக் பாஷா, பா.தீபன், இரயில்வே சீனுவாசன் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில்!

# உயிரிழந்த மாடுபிடி வீரர் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம்!

### முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.17-

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு -

ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:-

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் 14.01.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், விளாங்குடியைச் சேர்ந்த நவீன்குமார் என்ற மாடுபிடி வீரர் மாடு முட்டியதில் காயமடைந்து உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# கழகக் கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் பி.ஆர்.சுந்தரம் மறைவு!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மா.மதிவேந்தன், எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!

நாமக்கல், ஜன.17-

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான பி.ஆர். சுந்தரம் காலமானார். நேற்று (16.01.2025 ) காலை 8 மணி அளவில் ராசிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பி ஆர் சுந்தரம் உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பி.ஆர். சுந்தரம் (2.4. 1951-16.01.2025) சொந்த ஊர். ராசிபுரம் அருகே உள்ள பச்சுடையாம்பாளையம். மனைவி எஸ். சுந்தரி, மகன் சுந்தர் தினேஷ் அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார். இவர் 1996 - 2006 வரை இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், (2014 - 2019) வரை நாமக்கல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

ஒரு முறை பச்சுடையாம் பாளையம் பஞ்சாயத்து தலைவராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவராகவும் இருந்துள்ளார்.

இவர் அதிமுகவில் 1997 முதல் 2000 வரை அதிமுக மாவட்ட செயலாளராகவும் 2001 முதல் அவைத்தலைவராகவும் இருந்துள்ளார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவில் இருந்து விலகி, தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 17.1.2021 திமுகவில் இணைந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளராக இருந்து வந்துள்ளார்.

### மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி முன்னிலையில்

# வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை!

### மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார்

வேலூர், ஜன.17-

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு மாநகர தி.மு.க சார்பில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், வேலூர் ரமேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், பகுதி செயலாளர்கள் எஸ். தயாள்ராஜ், பாலமுரளி கிருஷ்ணன், வி.ஜி.கே.சுந்தர விஜி, மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் முருகப்பெருமாள், வி.எஸ்.முருகன், ஜெய்சங்கர், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் நூருல்லா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தேவராஜ்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார், துரை அரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு அவரது உருவ சிலைக்கு மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், வேலூர் ரமேஷ், பகுதி செயலாளர்கள் முருகபெருமாள், எஸ். தயாள்ராஜ், பாலமுரளி கிருஷ்ணன், வி.ஜி.கே.சுந்தர விஜி, ஜெய்சங்கர்,மாமன்ற உறுப்பினர்கள் வி.எஸ். முருகன், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

# பி.ஆர்.சுந்தரம் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜன. 17 –

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளரும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான பி.ஆர்.சுந்தரம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் மறைந்ததை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட சுந்தரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாது அதற்கு முன்பும் பல்வேறு நிலைகளில் பல பொறுப்புகளில் சிறப்பாக மக்கள் பணி ஆற்றி வந்தவர் ஆவார். 2021ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, கொள்கை பரப்பு துணைச் செயலாளராகவும் சுந்தரம் அவர்கள் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசியல் இயக்க நண்பர்கள், நாமக்கல் மாவட்ட மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், பச்சூர் ஊராட்சி, பழையபேட்டை கிராமத்தில் மாட்டு பொங்கலை முன்னிட்டு நடைபெற்ற நடன நாட்டியாலயா நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன்,மாவட்ட பிரதிநிதி கணேசன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காந்தி, ஆனந்தன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜெயாசரவணன், தேசிங்கு ராஜா, ஊராட்சி மன்ற து.தலைவர் சதீஷ்குமார், மாவட்ட விவசாய அணி து.அமைப்பாளர் ராஜ்குமார், மு.ஊராட்சி மன்ற தலைவர் மல்லிகமகேந்திரன், செந்தில்குமார், வினோத், அகிலன், நந்தகுமார், தீரன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மா. சுப்பிரமணியம்
### சனவரி 15 (2013)



**ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்**

**ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“ ‘மா.சு’ என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மலேசியா தளபதி பேரவை சார்பில்

# தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழா!

### ஜே.சிவானந்தம் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஜன.17-

மலேசியா தளபதி பேரவை சார்பாக சமத்துவ பொங்கல் விழா திராவிட நாயகர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மலேசியா தளபதி பேரவை செயலாளர் ஹச்.எம்.ஜெய்னுதீன் வழிகாட்டுதலின்படி மலேசியா தளபதி பேரவை பொருளாளர் ஜே.சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மகளிர் அணியினர் பவித்ரா, கனிமொழி, கதீஜா பிவி, சபியத் நிஷா, நசீமா பேகம், பார்வதி விஜயா, தனுஷா ஹசீனா, பர்வீன், நஸ்ரின், ஜாஸ்மின் பர்வீன், காதர் மீரான், அயூப் கான், செல்வி, பாலமுருகன், சுந்தர பாண்டியன், சமூக ஆர்வலர் தட்சணாமூர்த்தி, அருள்தாஸ், ஜான் பீட்டர், முத்து, மணிகண்டன், அப்துல் தம்மம்பட்டி நஜ்மா, வாலிகண்டபுரம் மன்சூர் அலி, மணல்மேடு அல் அமீன், ஏ.சாதிக் பாட்சா, டி.வி.ஒய்.எஸ்.வினோத்,

மேல திருமலை ராஜபுரம் பொதுக்குழு உறுப்பினர் க. புருஷோத்தமன், தினேஷ்குமார், அய்யனார், தொழிலதிபர் சலீமுதீன், அசாருதீன், நாகேந்திரன், தயாளன், மூர்த்தி, அந்தோணிசாமி, வில்பட், கரிகாலன், அமானுல்லா, தொழிலதிபர் அன்சாரி, பிரபு, கலியமூர்த்தி,

சபி, ஹக்கீம் அலி, தண்டபாணி, ஐஸ் அகமதுல்லா, ஆசிப் அலி சேட் மற்றும் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. சுப்பையா
### சனவரி 16 (1980)



**சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.**

**சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**“எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா” என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**